www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் - 10

Chanchive udgave-10



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர்.10

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1 | நோக்கு | 3 |
| 2 | திருக்குறள் விளக்கவுரை | 4 |
| 3 | கவிதை | 5 |
| 4 | சிறுவர் அங்கம் | 7 |
| 5 | மீராவின் தொடர் நவீனம் | 8 |
| 6 | படங்களின் வினைவு (கவிதை) | 10 |
| 7 | சிரிக்கச் சிந்திக்க | 13 |
| 8 | Den Rigtige kultur? | 18 |
| 9 | குறுக்கெழுத்துப் போட்டி | 21 |
| 10 | ஈராக்-குவைத் பிரச்சினை | |
| 11 | பனிப் போர் (கவிதை) | 26 |
| 12 | கடிதங்கள் | 28 |
| 13 | போட்டி | 30 |
| 14 | முயற்சி (சிறுகதை) | |
| 15 | தமிழ் சினிமா ஓர் பார்வை | 41 |
| 16 | முளையுமன் துமா (கவிதை) | 46 |


அட்டைப் படம் விளக்கம்

சுதந்திரப் பறவைகள்

- முரளி.



வெளியீடு

தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

அன்பான வாசகர்கட்கு !

10 வது இதழினை சிறப்பிதழாக வெளியிடுவதற்காக நாங்கள் பல முயற்சிகள் எடுத்தோம். அச்சகத்தில் அச்சிடுவதற்கான செலவு எங்கள் நிதி நிலைமைக்கு கட்டுப்படியாகாத காரணத்தால் வழக்கம் போலவே சாதாரணமாக இந்த இதழினையும் வெளியிட வேண்டியுள்ளது. நாங்கள் எதிர்பார்த்தது போல் சிறப்பு இதழினை வெளியிடுவது இப்போது எங்களுக்கு சாத்தியமில்லை இன்னொரு சந்தர்ப்பத்தில் சஞ்சீவி சிறப்பு இதழாக வெளிவரும் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

எங்களுக்கு தொடர்ந்து அச்சிடும் பிரச்சினை இருப்பதாலேயே 9 வது மலருக்கும் 10 வது மலருக்கு மிடையில் மிகவும் நீண்டதொரு இடைவெளியேற் பட்டுவிட்டது. இந்த நடைமுறைப் பிரச்சனையின் காரணமாக இனிவரும் இதழ்கள் ஒவ்வொரு ஒன்றரை மாத இடைவெளியில் வெளிவரும் என்பதை வாசகர்களாகிய உங்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேலும் நாங்கள் கடந்த இதழில் குறிப்பிட்டது போல் விரைவில் வாசகர்களாகிய உங்களோடு ஒரு சந்திப்பினை ஏற்படுத்தி, சஞ்சீவியும் அதன் வளர்ச்சியும் பற்றி உங்களோடு கலந்துரையாட விரும்புகின்றோம். இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்பும் வாசகர்கள் உங்கள் பெயர்களையும் முகவரியினையும் (OCTOBER) அடுத்த மாத முடிவுக்குள் அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சஞ்சீவி ஆரம்பித்து ஒரு வருட காலம் பூர்த்தியடைந்து விட்டது. இந்த 10 வது இதழ் வரை ஆக்கங்களை அனுப்பிவைத்த ஆக்கதாரர்களுக்கும், ஆதரவினை வழங்கிவரும் வாசகர்களுக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தொடர்ந்து உங்கள் ஆதரவினையும், ஒத்துழைப்பையும், நம்பி சஞ்சீவியின் வளர்ச்சிக்கு மேலும் தொடர்ந்து உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

— சஞ்சீவி —


# திருக்குறள் விளக்கவுரை

கருவியும், காலமும், செய்கையும், செய்யும்
அருவினையும், மாண்டது அமைச்சு.

(ப.உ.) கருவி - தொழிலுக்கு வேண்டிய சாதனம். காலம் - அதற்கு ஏற்ற காலம். செய்கையும் - செய்யும் வகையும். செய்யும் அருவினையும் - செய்யப்படும் அரிய செயலும். மாண்டது - இவைகளைச் சிறப்புடன் ஆராய வல்லவனே. அமைச்சு - மந்திரியாவான்.

(க.உ.) சாதனம், காலம், செய்யும் விதம், செய்யும் தொழில் இவைகளை ஆராய்ந்து செய்ய வல்லவனே மந்திரி ஆவான்.

அங்கவியல் (அமைச்சு)
குறள் கலை: 1.



www.tamilarangam.net



# ஆறுதல் கூற அவர்கள் இல்லை

முத்தமிழே உனக்கு
புதுச் சொற்கள் கிடைப்பது
அந்நிய படை எடுப்புகளின் - பின்புதானே

ஹெலி, பொம்பர், பங்கர்!!!
இவைகளும் புதுச் சொற்கள் - இன்று

யமன் வருவதைப் பார்த்தவர்களில்லை - ஆனால்
ஹெலியைக் கண்டவுடன்
மக்கள் உசார் - பின்னால்
வருவது பொம்பர் தானே

பொம்பர்கள் எங்கள் - மக்களை
பங்கர்களில் பதுங்கி
வாழவைத்த குற்றம் என்ன?
தமிழே உன்னை - பேசியதா?

அதுதான் செய்த குற்ற மென்றால்
தமிழே உன்னைப் பாடியே
எம்பிகள் ஆனவர்கள் - எங்கே?

அவர்கள், பாராளுமன்றம் (பாமரரை) ஆளவும்
கோட்டாக்களுக்கும்.....
சொத்தடிமைத் தனத்தையும் - தமக்கே
சொந்தமாக்கவே
தமிழே உன்னைப் - பாடினர்.

ஆனால் இன்று
நாங்கள் நடந்த - யாழ்நகர்
நாங்கள் வாழ்ந்த - சிறு கிராமங்கள்

www.tamilarangam.net



பொம்பர்கள் போடும்
நேபாம் குண்டுகளால்
சுடு காடு ஆகின்றது

உயிர் இழந்து
உணர்வுகள் இழந்து
உடமைகள் தான் இழந்து
அனாதரவாய் நிற்கும் – தமிழ் மக்களுக்கு

ஆறுதல் கூற அவர்கள் இல்லை.

• வளவன் •

# டென்மார்க் தமிழ் வீதியில்

பெரியவர்:- எங்க தம்பி கன காலம் கண்டு.... ? எங்கையும் தூர போனனியே ? (கையில் பலசரக்கு சாமான் பையுடன்)

இளைஞன்:- இல்லையுங்கோ; கொரஞ்சக் காலம் வீட்டுக்குளேயே இருக்க வேண்டி வந்துட்டு..... அதுதான் வெளியிலே காணயில்லை (அருகில் வெள்ளைக்காரியுடன்).

பெரியவர். அ.... அ.. அப்படியே ! நான் நினைச்சன் நீ எங்கையும் தூர இடத்துக்கு போயிட்டாய்யாகும் என்டு.... அது சரி; இது ஆர் இந்தப்புள்ளை புதுசாக இருக்கு !!!

இளைஞன்:- (சாடையான அசட்டுச் சிரிப்புடன்) இது தான் யோடிக்..

பெரிய :- அப்ப முந்தி வேற ஒன்றோட ஒருக்கா வீட்டை வந்தாய்! அப்ப அது வேறயா?

இளை :- ஓமுங்கோ; (சிரித்துடன்)


பெரிய :- நாட்டு நிலைமைகள் இப்படிப் போனா என்ன நடக்குமோ தெரியாது. (கவலைப் படுமாப் போல)

இளைஞன்:- (அவசரத்துடன்) ஓமுங்கோ அதுதான் எனக்கும் கவ

(தொடரும்) 47)

www.tamilarangam.net






1. "வானொலி"யைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?

2. அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் மயக்க மருந்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?

3. சில நோய்களின் வளர்ச்சியைத் தடை செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் "பென்சிலின்" என்னும் மருந்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?

4. ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் யார்?

5. மின்விளக்கைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?

(பதில்கள் 34ம் பக்கம்)

**ஒத்தகருத்துள்ள சொற்கள்.**

1. அம்மா- தாய்.
2. சூரியன்- கதிரவன்.
3. நாழிகை - நேரம்.
4. பூமி- பார்.
5. வீடு- மனை.

**எதிர்கருத்துள்ள சொற்கள்**

1. இன்பம் - துன்பம்.
2. நண்பர் - பகைவர்,
3. வறுமை - செல்வந்தம்,
4. வீரம் - கோழைத்தனம்,
5. நன்மை - தீமை.

www.tamilarangam.net



# நான், எனது, எனக்கு...

மீராவின் தொடர் நவீனம்

5ம் பாகம்

"இது என்ர வீடு..... அக்காக்கு நான் தரமாட்டன்."

"ஆளைப்பார் ஆளை முளைச்சு மூண்டிலை விடேல்லை. கிழட்டுக்கதை---- ஆள் பரு சுட்டி---- என்ர குஞ்சு."

"நான் தான் முதல்ல சாப்பிடுவன்.... நான் தான் முன்னுக்கு..... நான் சொல்லுற மாதிரிதான்....."

"சரியாய் பேரனை உரிச்சுப் பிறந்திருக்குது.... நான் என்ற உடையார் இருக்குத்தான்... .. பரம்பரை விளங்கட்டுமன்......"



நான் என்ற கால்களும் எனது என்ற கைகளும் முளைக்கத் தொடங்கின.

பேச்சு அதற்குத் தண்ணீரானது, பழக்க வழக்கங்கள் அதற்கு பசளையானது.

அன்றிய இடமெல்லாம் "நான்" என நின்றது. எட்டியது எல்லாம் "எனது" எனக் காங்கணம் கட்டியது.

சிவா.

முழுவு!

அகற்றப்பட வேண்டிய நான்" – அதற்கு
அகந்தையைக் கொடுத்தது.
எட்டத்தில் வைக்கப்பட வேண்டிய "எனது, எனக்கே"
அதற்குள் எண்ணற்ற ஆசையை வளர்த்தது.

ஆம்!

பாலகனுக்குள் இரு பாம்புகள்!
பச்சைக் குழந்தையுள் இரு பாம்புகள்!!

கண்ணனுக்குள் ஒருகம்சன்!
கர்த்தருக்குள் ஒரு கரிய சாத்தான்!!

அறிய வில்லைப் பெற்றோர்கள் அதை!
"ஆகா ஆசையைப் பார் ஆசையை" என
அன்றில் கொஞ்சினாள் அம்மா.
"அடி மங்காமல் பிறந்திருக்கிறான்" என
ஆனந்தப்பட்டார் அப்பா.

அந்த கொடிய பாம்பின் பல்லைப் பிடுங்கி எறிய வேண்டிய அவர்களே
பல்லைப் பாதுகாக்கும் பல் வைத்தியர்களானார்கள்!

வெடிக்கப் போகிறது "பாம்" எனத் தெரியாமலே
எதிரி வந்தால் எறிவோம் என
பெட்டகத்தில் பூட்டி வைக்க முற்பட்டார்கள்!

என்ன நடந்தது?

கருவேறின் ஒவ்வொரு கலத்திலும்
நஞ்சு பரவத் தொடங்கியது.

நீலகண்டன் தோற்கடிக்கப்பட்டான்.
அவனுக்கு கழுத்தில் மட்டுமே விடம்.

இங்கு – கருவெல்லாம் விடம்
கலமெல்லாம் விடம்
காணும் இடமெல்லாம் விடம்.

www.tamilarangam.net



விடத்திலேயே விண்கட்டிக் கூவிப் பறக்கிறது அப்பட்டம். நா(ன்)"ன இழுக்க இழுக்க மேலும் உயரப் பறக்கின்றது. பறக்கும் இந்தப் பட்டத்தின் முடிவுதான் என்ன?

தொடரும்-

# பாடங்களின் விளைவு !!

இன்று நம்மவர்களில் எத்தனையோ பேர்
உலகின் எத்தனையோ மூலைகளில்
இது எல்லோரும் அறிந்த ஒன்று – அங்கு
அகதிகள் போல வாழ்பவர் சிலர்
அந்தஸ்து உள்ளவர் போல் வாழ்பவர் பலர்

வேலையில் நாட்டமுள்ளவர் பலர்
கல்வியில் நாட்டமுள்ள வர் சிலர் – இருந்தும்
ராமனின்* அலை நீளத்தின் விளைவுகளை அறியவில்லை
ராதிகாவின் விவாகரத்தின் விளைவுகளையே அறிகின்றோம்
ராமானுஜனின்* தேற்றம் பற்றிப் புரியவில்லை
ரஜனிக்காந்தின் தோற்றம் பற்றிப் புரிகிறது.

பைதகரசின் விதி நினைவில் இல்லை - மனதில்
பார்த்தீபன் + சீதா மணக்கோலம் நிறைந்துள்ளது
எமது நாட்டின் வாய்ப்புமுறை தெரியவில்லை
அமலா வீட்டு வளர்ப்பு முறை தெரிகிறது
கம்பியூட்டர் பாடங்கள் இனிக்கவில்லை
கங்கை அமரன் இசைக்கச்சேரி இனிக்கின்றது.

விஞ்ஞானத்தின் மகிமை தெரியவில்லை
விஜயகாந்தின் மனைவி பெயர் தெரிகிறது.
இப்படி... சினிமா நட்சத்திரங்களின்
பாட்டன் தொடக்கம் பல்லொழி பெயர் வரை

www.tamilarangam.net



அறிந்துள்ளோம்.

பாடங்களிலும் நாம் நிறைய வேகவனம் எடுக்கிறோம்
ஆனால் ...... இந்த பாடப்புத்தகங்கள்......
ஏன் தான்
நித்திரைக்குளிசைகள் ஆகின்றன?

* C.V. ராமன், * ராமானுஜன் - இந்திய விஞ்ஞானிகள்.

அமுதினி + லாவா
(இலங்கை + டென்மார்க்)

---

## வாழ்க வளர்க.

இருமொழிகள் இணைந்து நிற்கும்
ஒரு பாலம் கண்டேன்.
இங்கிதமாய் செயல்கள் பல
புரியும் விதம் கண்டேன்.
சங்கடங்கள் பல கடந்த
நட்புறவுச் சங்கம் - அதன்
"சஞ்சீவ்" மாத இதழ் அருமருந்தாய்த் துலங்கும்
கோணாது உங்கள் பணி
வானளாவி வளர
கோடி நலம் வேண்டி இங்கே
வாழ்த்துகின்றேன் வாழ்க.

_சவேரியன்_

www.tamilarangam.net



9 ஆது இதழில் வெளிவந்த உலக உதைபந்தாட்டப் போட்டி பற்றிய கேள்விகட்கான பதில்கள்.

1. 24 நாடுகள்.
2. தென் கொரியா, அரபிக் ஐக்கிய ராச்சியம் (ARAB EMIRATEN).
   கமரூன், எகிப்து.
3. இத்தாலி. நடைபெற்ற இடம் ஸ்பெயின்.
4. ருமேனியா.
5. ரிச்சாட் முல்லர் நீல்சன். (Richard Møller Nielsen).
   செப்பியன் ரெக் (Sepp Piontek).
6. மொராக்கோ, அல்ஜீரியா.
7. மெக்சிக்கோ, 24 நாடுகள்.
8. 1930. உருகுவேயில்.
9. உருகுவே – ஆஜன்ரீனா.
   உருகுவே.
10. மேற்கு ஜேர்மனி.
    இத்தாலி, ஸ்பெயினில். மேற்கு ஜேர்மனி.
11. 1939 – 1949.
12. ஸ்வீடன்.
    பிரேசில்.

சரியான விடையினை எழுதி பரிசில் பெறும் அதிஷ்டசாலி,
பொன். மகேஸ்வரன்.
7500, Holstebro.

தீமை என்பது ஓர் அனுபவம். அது அறியாமையின் நிலையே. அந்த அறியாமை என்ற அனுபவத்தை நீக்க அறிவைத் துணையாக்கிக் கொள்ள வேண்டும். அறிவு வளர தீமை என்ற அறியாமை நிச்சயம் நீங்கிவிடும்.

– ஜேம்ஸ் ஆலன் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிரிக்கச் சிந்திக்க

## தாய் + மண்

(முரளி)

நேரம் சரியாக 16.04. இந்த ரெயிலுக்காக நிரந்தரமாக காத்திருக்கும் ஏறக்குறைய இருபது பிரயாணிகள். வேலை முடிந்து வரும் வேலையாட்கள் படிப்பு முடிந்து வரும் மாணவ மாணவிகள், இவற்றை விட இன்னும் எத்தனையோ விதமானவர்கள் எல்லோரும் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தாலும், வேலை செய்கின்ற இடமும் பாடசாலை அமைந்த இடமும் கேர்னிங் [HERNING] தான். எங்கள் இருபது பேரைத் தவிர சில வேளைகளில் சில பேர் எம்மோடு இணைந்து கொள்வார்கள். இவர்களில் ஆறு, ஏழு பேர் அதிகாலையில் என்னோடு ஒன்றாகப் பயணம் செய்பவர்கள். அவர்களில் என் வகுப்புத் தோழன் ப்பிரியன், நண்பி லீனா. எங்கள் மூவரோடு சீம இடத்தில் நிரந்தரமாக இருக்கும் ஜலவ்.

இந்த நான்குபேரும் ஏறக்குறைய ஆறு மாத கால பிரயாணச் சிநேகிதர்கள். இந்த நாலுபேரும் ஒருவருக்கொருவர் நன்கு தெரிந்து கொண்ட புரிந்து கொண்ட நண்பர்களானோம். எமது பிரயாண நேரத்தில் ஏதோ ஓர் விதமான உரையாடல், விவாதம், பகிடி போன்றவை இடம்பெறும். இவற்றில் இலங்கை பற்றிய டெனிஸ்மக்களது கண்ணோட்டம், கலாச்சாரம், பொழுது போக்குகள் போன்ற பல விடயங்கள் அடங்கும்.

வழமை போல ஒரு நாள். சமர்கால நேரம், நல்ல வெயில். வெட்கை காரணமாக ஜன்னலின் மேற்கதவைத் திறந்து விட்டு வழமையாக அமரும் அந்தக் கோணேர்

-றில் அமர்ந்து கொண்டு வெளியே தெரியும் வயல்களையும் மரக் கூடல்களையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

"ஏய்---! என்ன கடுமையாய் யோசிக்கின்றாய்... என்ன பிரச்சினை"... என என் சிந்தனையைக் கலைத்தாள் மீனா. "என்ன ஒருமாதிரியாய் இருக்கிறாய்" என்றாள். "ஒன்றுமில்லை சும்மா யோசிக்கின்றேன்" எனப் பதிலளித்தேன். "நீ ஏதோ பொய் சொல்லுகின்றாய்... வழமையான உன் கலகலப்பு சிரிப்பு ஒன்றுமில்லையே.... ஏதாவது பிரச்சினை என்றால் எங்களுக்கும் சொல்லு" என வேண்டிக் கொண்டான் பிலிப்பன். வழமைபோல் ஒன்றுமே பேசாமலிருக்கும் லைலா கூட "அப்படி என்னதான் உனக்கு இன்று பிரச்சினை" எனக் கேட்டாள். இதையே திருப்பித் திருப்பி வேறும் கேட்டனர்.

"நீங்கள் நினைப்பது போல எனக்கொரு பிரச்சினையும் இல்லை. இந்த வெயில் இந்தச் சூழ்நிலை, அந்த வயல்கள், மரங்கள் தான் என்னைக் கொஞ்சம் யோசிக்க வைத்து விட்டது." என்றேன் நான். "அப்படி அதிலே என்ன தான் இருக்கு" என்றாள் மீனா. "இல்லே சரியாக இந்த வெயில் வயல் எல்லாம் எங்கள் நாடு போலவே இருக்கு அதுதான். நாட்டைப் பற்றி என்ன தான் நினைக்கின்றாய். என்றாள் திரும்பவும். "என்ரை வீடு வாசல், கிணற்றடி, தென்னைகள், வாழை மரங்கள், முற்றத்திலே நிற்கும் மல்லிகை, குரோட்டன்கள், கொத்திப் பிரட்டியிருக்கும் அந்தச் செம்மண் தோட்டங்கள், வாசிகசாலை, பின்னேரம் கூடும் பாலத்தடி, மாமா வீட்டு மாடு கன்று... ஆடு குட்டி... இன்னும் எத்தனையோவற்றை நினைத்துப் பார்க்கின்றேன். எங்கள் நாட்டில் எப்போதும் சின்காலம் தான், மனதில் தோன்றியவைகளை அடுத்தடுத்து வரிசையாய்ச் சொன்னேன்.

"இவைகள் தானா...? இவை கூட இங்கே இன்னொரு வடிவங்களில் இருக்கின்றது. இதுக்குப் போயா... கவலைப்படுகின்றாய்" எனக் கூறி என்னை சந்தோசப்படுத்த முயன்றார்கள்

ப்பிரியனும் மீனாவும்.

"வெறும் மரஞ்செடி கொடிகளாலும் மட்டும் ஒரு நாட்டின் தன்மைகளை, அதன் உணர்வை பிரதிபலிக்க முடியாது அதற்கென ஓர் பிரத்தியேகமான உணர்வும், தன்மையும் இருக்கத்தான் செய்கின்றது. அந்த தன்மையை சொல்லி விளங்கப்படுத்த முடியாது, சந்தர்ப்பம் வரும் போது உணர்ந்து கொள்ள முடியும்" எனச் சொல்லிவிட்டு எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார் லைவ்.

"இவைகள் மட்டுமா...? அம்மா... ஐயா... சகோதரங்கள்.... ஏறக்குறைய ஆறு வருடங்களாக அவர்களை நான் பார்க்கவில்லை... இவர்களை நான் எப்போது தான் மீண்டும் பார்க்கப் போகின்றேனோ...?" என்றேன் நான். "Hold da haft man" எனச் சொல்லிக் கொண்டு பலமாகச் சிரித்துக் கொண்டான் ப்பிரியன். ப்பிரியன் சிரித்ததைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினார். எங்கள் மூவரையும் ஒரு கணம் நிமிர்ந்து பார்த்து விட்டு தலையைக் குனிந்து கொண்டார் லைவ். "ஏய் ப்பிரியன் ஏன் இப்போ சிரிக்கின்றாய்...? இதிலே சிரிக்க என்ன இருக்கு... ஆ... என ஆவேசத்தோடு கேட்டேன்.

"என்ன...? ஆறு வருடங்களா... மீண்டும் சிரித்துக் கொண்டே சொன்னான். எவ்வளவோ தூரத்தில் இருக்கும் உனது அம்மாவையும் ஐயாவையும் பார்க்கவில்லை.... ஆனால் நானோ... என் குடும்பத்தினரை ஏறக்குறைய எட்டு வருடங்களாக ... அதுவும் இந்த நாட்டிலிருக்கும் Ahrus இல் இருக்கும் என் அம்மாவைப் பார்க்கேலே... அது தான் சிரித்தேன் என்றான் ப்பிரியன். "நீ ஏன் பார்க்கவில்லை" எனத் திருப்பிக் கேட்டேன்.

எனக்கு எவ்வளவோ விருப்பம் இருக்கு, ஆனால் என்னால் முடியவில்லை, எனக்கு ஓய்வு கிடைக்கின்ற நேரம் அவர்களுக்கு நேரம் கிடைக்குதில்லை, அவர்களுக்கு நேரம் கிடைக்-

www.tamilarangam.net



-கின்ற நேரம் எனக்குக் கிடைக்கவில்லை. இந்த நாட்டு இயந்திர வாழ்க்கை முறைகள் ஒவ்வொருவருக்கிருக்கும் அவசரத் தேவைகள் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாத நிலை. இதுமட்டுமல்ல கொஞ்சக் காலமாக அவர்களுக்கு நான் ரெலிபோன் கூட எடுக்கவில்லை, நான் இப்போது இங்கு இருப்பது கூட அவர்களுக்குத் தெரியாது." எனத் தொடர்ந்து கொண்டு போனான் ப்பிரியன்.

என் எண்ணம் சிந்தனை எல்லாம் திசை மாறிப் போனது. என்ன நான் கண்டறியாத வாழ்க்கை. ஒரு தாய் பிள்ளையையும் ஒரு பிள்ளை தாயையும் சந்திக்கச் சந்தர்ப்பம் இல்லையா. என்னால் நம்ப முடியாமல் இருந்தது. கண்டறியாத உலகமப்பா என மனதில் நினைத்துக் கொண்டேன்.

ப்பிரியனும் லீனாவும் மாறி மாறிச் சிரித்துக் கொண்டார்கள். எனக்குக் கூட ஓர் சகோதரி இருக்கின்றாள். அவளைப் பற்றி எனக்கு ஒன்றும் இப்போ தெரியாது." என்றாள் லீனா. திரும்பவும் மாறி மாறிப் பலமாகச் சிரித்துக் கொண்டார்கள் லீனாவும் ப்பிரியனும், ஆனால் என்னால் அவர்களோடு சேர்ந்து சிரிக்க முடியவில்லை, உண்மையிலே எனது நிலைமை எண்ணிக் கவலைப்படுவதிலும் பார்க்க இவர்களது நிலையே பெரிய கவலைக்கிடமாயிருக்

உங்களைப் போல் எத்தனை பேர் உற்றார் உறவினர்களைப் பிரிந்து இங்கு பறந்து வந்துள்ளீர்கள், அப்படியிருந்தும் நீங்கள் உங்கள் உறவுகளையும், நாட்டையும் நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள், ஆனால் எங்களில் எத்தனையோ பேர் இருக்கின்ற உறவுகளையும் இருந்த உறவுகளையும் முறித்துக் கொண்டு எல்லாவற்றையும் துறந்து மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் "இந்தச் சொந்த நாட்டிலேயே அகதிகளைவிட மிகவும் கஸ்ரமான மனநிலையில், கவலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் இதை ஒரு பெரிய விடயமாக நினைக்கவேயில்லை. அது பற்றிச் சிந்திப்பதில்லை. இது ஒரு வகையில் நன்மையும் தான். எனக் கூறி-

www.tamilarangam.net



விட்டு மீண்டும் மௌனமானார் லைவ். சிரித்துக் கொண்டிருந்த மீனாவும் ப்பிரியனும் கூட ஒன்றுமே பேசாது மௌனமானார்கள். இந்த ஆறு மாத காலத்தில் லைவ் இப்படி அதிகம் கதைத்ததுமில்லை, ஒருவரும் இப்படி அமைதியானதில்லை.

"சொந்த நாட்டிலேயே அகதிகள்" "இயந்திர வாழ்க்கை" இந்த நாட்டு வாழ்க்கை முறையில் எங்களிலும் எத்தனை எத்தனையோ மாற்றங்கள். எங்களுக்கும் இனி மேலக் காலங்களில் என்னென்ன ஏற்படப் போகின்றதோ... ப்பிரியன் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான். ஆனால் வழமையான அந்தச் செந்தழிப்பு அப்போது அவனிடத்தில்லை, எங்கேயோ ஓர் சோகம் அவனுள் இழையோடிக் கொண்டிருந்தது.

"om få minttur.. Holstebro." என ஒலிபெருக்கியில் ஒருவரும் ஒருவரோடு ஒருவர் பேசாத வண்ணம் மிகவும் மௌனமாக ஆசனங்களைவிட்டு இறங்குவதற்காக எழுந்து கொண்டோம்.

- முற்றும்.

# வாசகர்களின் கவனத்திற்கு!



அருகிலுள்ள படத்திற்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆக்கங்கள் கதைவடிவங்களாகவோ, கவிதை வடிவங்களாகவோ, கட்டுரை வடிவங்களாகவோ அமையலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

"சஞ்சீவி"

www.tamilarangam.net



# DEN RIGTIGE KULTUR?

Mange Danskere har vænnet sig til at deres kultur og livsform er den eneste rigtige måde at indrette sig på. Derfor bliver de let provokeret af flygtninges og indvandrers livsformer og "forlanger" at de skal lave om på sig selv. Danskerne mener at de skal integeres i det danske samfund. Men hvor åbne er vi danskere egentlig over for de fremmede.

Danskerne har udviklet et samfund som vi er stolte af og ønsker at verne om, der er selvfølgelig forskelig på hvad den enkelte mener der skal "gemmes på" og hvad der skal laves om på, med andre ord i hvilken retning vort samfund skaludvikle sig.

Helt kort kan man sige at Danmark er er, ikke særligt religiøst, kristent land, som bygger på individets selvbestemmelses ret, vi har et parlamentarisk demokrati samt et minimum af solidaritet.

Menneskerettighederne respekteres og anvendelsen af krig og vold respekteres ikke som politiske instrumenter.

Mange flygtninge og indvandre kommer fra lande med andre firheds og ligheds begreber, hvor man ikke sætter individet, men familien i centrum, og hvor religionen er langt mere synlig og spiller en mere centeal rolle i hverdagen. Mange kommer også fra lande hvor vold og undertrykkelse hører til hverdagen.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Der er altså mange grunde til at danskeren syntes at deres livsform er den rigtige, den bedste, eller den mest fornuftige. Vi har da også indrettet samfundet til bedst muligt at tilgodese en udvikling i den retning. Det gælder for både lovgivningen, den offentlige administration, bolig byggeriet, for ikke at taleom arbejdspladserne og det sociale og kulturelle liv.

Det er dog ikke på nogen måde indlysende at det er den enesterigtige måde at leve og organisere sig på. Det er netop derfor at danskerene så let lader sig provokere af de fremmede.

Disse reaktioner fra danskerens side føre meget let til at den bedste "integration" er en fordanskning så hurtig som overhovedet muligt, nemlig assimitation (den indstilling, at de religiøse, moralske, politiske og andre normer man er opdraget til er alle andre overlegne), racisme (troen på visse racers medfødte ret til at herske),xenofobi (frygt og afsky for det fremmede), eller bolt uvidenhed, det er ikke let at vurdere, men mon ikke oftes det er en blanding af det hele.

Men at det efterlader flygtninge og indvandre i en meget vanskelig sitiuation, er der ingen tvivl om.

De bliver som oftets dårligt socialt og som en etnisk minoritet marginaliseret i en sådan grad, at de kun under ganske bestemte betingelser (nemlig de danske) kan gøre brug af samfundets institutioner eller deltage i udvingen af samfundet.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Denne provokation skal vendes til en nysgerrighed--- en nysgerighed for at få at vide hvrfor at man lever på netop den måde og sætter netop de livsformer højt--- en nysgerrighed efter at finde ud af hvad vi kan lære.

En nysgerrighed, der kan ændre det danske samfund så det giver plads til denne forskellighed.

Med andre ord så der bliver tale om en rigtig integration, så flygtninge og indvandre kan indgå i det danske samfund samtidig med at de bevare deres egne kendetegn som gruppe eller som enkelt personer-- altså deres egen livsformer og kultur, som sammen med de danske kommer til at udgøre en samlet helhed.

Flemming Skindhøj.

பெரும்பாலான டெனிஸ் மக்கள் தங்கள் கலாச்சாரம் வாழ்க்கை முறை தான் சரியானது என எண்ணுகின்றார்கள். இவர்கள், அகதிகளையும், வெளிநாட்டவர்களையும் ஏன் வெறுக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தும், வெளிநாட்டவர்களும், அகதிகளும் டெனிஸ் சமுதாயத்தில் எப்படி வாழ வேண்டும் என டெனிஸ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்துவதே "Den rigete kultur" என்ற கட்டுரையின் உள்ளடக்கம் ஆகும்.


நம்பிக்கை உண்டானால் வெற்றியுண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய லட்சணம் என்னவென்றால் விடாமுயற்சி.

-பாரதியார்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# குறுக்கெழுத்துப் போட்டி: 1

சஞ்சீவியின் விசேட வெளியீடான இதழ் 10இன் குறுக்கெழுத்துப் போட்டி இல: 9க்கு வாசகர்களாகிய உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

நீங்கள் குறுக்கெழுத்துக் கட்டங்களை பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன, அவ-ற்றுக்கான சரியான பதில்களைத் தெரிவு செய்து கட்-டங்களை பூரணப்படுத்துவதேயாகும்.

## கேள்விகள்: இட. வலம்:

1. 26: தமிழர்கள், வைபவங்களின் போது மங்கள சூதாக இதனை வரவேற்புப் பகுதியின் முன்பாக வைப்பர்.

2. 51: ஒருவரை மற்றவர் தப்பாக எடை போட்டால் இப்படிக் கணக்குப் போட்டு விட்டார் என்பர். இது இங்கு குழம்பியுள்ளது.

3. 16: சூரியனை இப்படியும் அழைப்பர்- குழம்பல்.

4. 17: இந்த வகை உலோகக் கம்பியை கூடுதலாகப் பயன்-படுத்தியே தொலைபேசி இணைப்புச் செய்வர்.

6. 19: சிறிய "பை"யை கையில் எடுத்துச் செல்லும் போது அது இப்படி அழைக்கப்படுகிறது.

7. 46: பூமியை இப்படியும் அழைப்பர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



22. 31: "பாரம்" என்பதனை இப்படியும் கூறுவர்.

32. 45: பன்ன வேலைக்காக பாவிக்கப்பட்ட ஓலையின் கழி-வுப் பகுதியை இப்படிச் சொல்வர். குழம்பியுள்ளது.

39. 52: எதுவித கருத்துமில்லை

44. 48: இது பிடித்தல் கூடாதென்பர்.

50. 29: 2ஆம் உலகமகா யுத்தத்தின் போது, வேறு நாட்டின் கறுப்பு இன இராணுவம் இலங்கைக்கு வந்தவேளை எமது மக்கள் அவர்களின் தோற்றத்தினைப்பார்த்து இப்படி அழைத்தனராம்.

கேள்விகள்: மேல் கீழ்:

4. 1: ஆணவம், திமிர் கூடியவர்களையும், மற்றவர்களை மதிக்காது நடப்பவர்களையும் "—" பிடித்தவர் என கூறுவர்.

7. 6: இந்த ஆறு இந்தியாவில் உள்ளது.

7. 13: வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் போது ஆரம்பப் பணமாக செலுத்தும் பணமே இது.

14. 17: பத்திரிகை, நூல் என்பன அச்சேற்றுவதை அழகாக "—" செய்தல் என்பர். இது குழம்பியுள்ளது.

19. 20: ஆறுதலாக நடந்து வரும்படி கூறுதலை இப்படியும் பேச்சு வழக்கில் சொல்வர்.

25. 26: பேச்சு அடக்குதலை இப்படிப் பிடித்தல் என்பர்.

28. 29: இந்த யுகத்தின் பெயர்.

33. 31: ஒவ்வொருவருக்கும் இத்துடன், கண்ணியம், - கட்டுப்பாடு இருக்கவேண்டும்.

33. 34: ஒரு விடயம் அல்லது பலவிடயங்களை அழகுற சில வரிகளில் படைத்தலை இப்படி அழைப்பர்.

www.tamilarangam.net



36. 39: பட்டுப் பூச்சி கட்டும் கூட்டின் பெயர் இது வே. – காதுக்குள் இருக்கும் அழுக்கினையும் பேச்சு வழக்கில் இப்படிக் கூறுவர். குழம்பியுள்ளது.

40. 42: வயது போன கிழவரை இப்படியும், இளையவன் அழைப்பதுண்டு. இவர் குழம்பியுள்ளார்.

44. 46: வில்லில் நாண் பூட்டினால் அதிலிருந்து பாயும் பாணமே இது. குழம்பியுள்ளது.

48. - : எமது உடலில் இந்த அங்கமும் முக்கியமானது.

50. 52: கரிய நிறமான இந்தப் பறவை இல்லாத ஊரே இல்லை

## போட்டியின் விபரங்களும் நிபந்தனைகளும்

1. சஞ்சீவியின் ஆசிரிய, செயற்குழு தவிர்ந்த எவரும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்பவர் கட்டங்கள் அனைத்தையும், அத்துடன் சரியான முகவரியினையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப்பக்கத்தில் உள்ள கட்ட அஞ்சல் பத்திரத்தை பூர்த்தி செய்து 01.11 க்கு முன்னதாக சஞ்சீவிக்கு அனுப்பிவைத்தல்.
(முகவரி அஞ்சற்பத்திரத்தில் உள்ளது.)
3. இதழின் அசல் பிரதியே ஏற்றுக் கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் சஞ்சீவியின் நடுவர் குழுவினால் தெரிவதால் மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், ௨ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
5. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
6. சரியான விடையும், பரிசில்கள் பெற்றவர்களின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

(தொடர்ச்சி பக்கம் 29)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈராக் குவைத் பிரச்சினை

"ஒபெக்" எனப்படும் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஸ்தாபனம் (ORGANISATION OF PETROLEUM EXPORTING COUNTRIES) என ஒரு அமைப்பு உள்ளது தெரிந்ததே. இந்த ஸ்தாபனம் தான் ஒவ்வொரு நாடும் ஒரு வருடத்தில் எத்தனை பீப்பா பெற்றோல் எடுப்பது என முடிவு செய்யும். இதன் காரணமாக மேற்குலக நாடுகள் தமக்குள் ஒருமுகமாக பெற்றோலின் விலையை தீர்மானிக்க முடியாதிருந்தது. கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இது பெரிய தலையிடிக்குரிய விடயமாகும். "ஒபெக்" அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஈராக், சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இமிரேட், இந்தோனேசியா, வெனிசுவேலா என்பன அடங்கும்.

சவூதி அரேபியா, குவைத் மன்னராட்சி நடக்கும் நாடுகளாகும். மன்னரே சகல அதிகாரங்களும் உடையவர் ஆவார். இவர்கள் மேற்குலக நாடுகளின் நண்பர்களும் ஆவர். இந்நிலையில், இவ்வருடம் தீர்மானிக்கப்பட்டதற்கு மேலாக குவைத் பெற்றோலை உற்பத்தி செய்து கொண்டது. இதனால் பெற்றோலின் விலை வீழ்ச்சியுற்றது.

கடந்த எழாண்டுகளுக்கும் மேலாக ஈரானுடனான யுத்தத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய வேண்டிய தேவை ஈராக்குக்கு இருந்தது. இதனால் குவைத் தனது கோட்டாவுக்கு அதிகமாக பெற்றோலை உற்பத்தி செய்ய வேண்டாம் என ஈராக் கேட்டுக்கொண்ட போதிலும் குவைத் தன்னிஷ்டப்படியே மேலதிகமாகவே உற்பத்தி செய்தது. இந்நிலையிலே ஈராக் - குவைத் மீது படையெடுப்பை நடத்தியது.

ஈராக் குவைத் மீது படையெடுத்தது சரியா என்பதை விட அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஏன் அதிகம்

www.tamilarangam.net



மத்திய கிழக்கில் அக்கறை காட்டுகின்றன என்பதே முக்கியம். பெற்றோல் விலை ஏறினால் அமெரிக்க வரவு செலவை சமாளிக்க பெரும் கஸ்டம் நேரிடும். இதனால்தான் உலகப் பொலிஸ்காரனாக தன்னைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்கா, ஜனநாயகத்துக்கு ஆபத்து, சுதந்திர நாட்டின் மீதான ஆக்கிரமிப்பை நாகரீக உலகு சும்மா பார்த்திருப்பதா எனக் கூறிக்கொண்டு சவூதி அரேபியாவில் தன்படைகளை குவித்து வருகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் வியட்நாமில் பெருமளவு படைகளை குவிக்கப்பட்டதன் பின்பு இப்போது வளைகுடாவில் அமெரிக்கப் படைகள் அதிகளவில் குவிக்கப்படுகின்றன.

ஈராக் ஒரு மில்லியன் படைகளைக் கொண்டிருப்பதுடன் ரஷ்ய, பிரெஞ்சு நவீன ஆயுதங்கள் ஏராளமாக வைத்திருக்கின்றது. இதேவேளை இரசாயன, உயிரியல் ஆயுதங்களும் நிரம்பவே உள்ளன. போர் ஒன்று மூளுமானால் இரு பக்கத்திலும் நிரம்பவே உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

ஆனால் அரபு நாட்டவரின் கவனத்தை திசை திருப்பும் நோக்குடனும், அமெரிக்காவுக்கு தோல்வியை ஏற்படுத்தும் நோக்குடன் ஈராக் அதிபர் சதாம் குசைனின் இஸ்ரேல் மீது படையெடுப்பை நடத்தலாம் என அரசியல் வல்லுனர்கள் கருதுகின்றனர். இதன்மேலும் இறந்தாலும் சதாம் குசெயின் அரபு மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நிறைந்திருப்பார். அண்மையில் அவரைச் சந்தித்த பிரமுகர்களின் கூற்றுப்படி அவர் மனம் தளராது தனது நிலைப்பாட்டில் உறுதிவாக இருப்பதாக தெரிகிறது. எது எப்படியிருப்பினும் வளர்முக நாடுகளுக்கு இந்த நிகழ்வுகள் மோசமான பொருளாதார பாதிப்பை ஏற்படுத்திவிட்டதுடன் இன்னும் மோசமான நிலைக்கே தள்ளும் என்பது வெளிப்படை.

-ஜெ-ஆர்-நாயகன்-

www.tamilarangam.net



# பனிப்பூக்கள்

மார்கழித்தூறல்
மயக்கந்தர
கதிரவன்
காதல் தூது விடுகிறான்
வான வில்லால்
பூமித் தேவிக்கு...

அவனுக்கும் புரியவில்லை!
எங்களுக்கும் விளங்கவில்லை!!
எப்போது விடியுமென்று — இவன்
கதிரவனுக்குக் காதல்
பூமித் தேவி மீது....

நாளெல்லாம்
பட்டினியாய்....
மேலெல்லாம்
அடித்தழும்பாய்...
உழுது விட்டான்
உழவனவன்
பூமித் தேவியினை...

அவன்
காரிருளன்
கற்பழித்து....
கால்களையும்
கட்டி விட்டான்— கலங்குவது
எம் இதயம்....

அவள்
கானகமாய்

www.tamilarangam.net



மாறிவிட்டாள் !
வாய் தன்னையும் - மூடிவிட்டாள் !!
இவளுக்குள்ளே
மர்மப் போராட்டம்....

பேனாக்கள் ஊறவில்லை!
ஆயுதங்கள்
பேசியது !!
போராலே மாண்டவர்கள்
வாழுகின்றார் - இவள்
நெஞ்சினுள்ளே...

வாடுவதோ
பூமித் தேவியவள்....
காரணமேன்!
கலங்குகிறாள் - கருக்கள்
சிதைந்ததனால்....

போலிப் பேச்சுக்கள் !
புரியாத திரை மறைவில்
பனிப் போர்கள் !!
எல்லாமே மூட்டம்தர - மீண்டுமிங்கு
அடிமுழக்கத்துடன்
தூறல்கள்....

கதிரவன்
வேண்டாமையா.... - உனது
கட்டாயக் காதல்
தேவியிவள் - அடிமையில்லை!
அவள் வேண்டுவது
விடிவற்காய்
உனது ஒளி !!!

ஜொனி
HOLSTEBRO.

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்பான சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு.

மலர். 9 கிடைக்கப் பெற்றேன். பொதுவாக எல்லா அம்சங்களும் மிகவும் சிறப்பாக இருந்தது. திரு. மீரா அவர்களின் துடக்கு கழிப்பு (மலர் 8) பொதி சுமக்கும் இளங்கன்றுகள். இரண்டு சிறுகதையும் சாதியை மை: யமாக வைத்து வெளியிட்டு இருக்கின்றீர்கள்.

டென்மார்கில் பல வகை இனமக்கள் வாழ்கின்றார்கள் எல்லாருடைய பொதுவான பிரச்சினைகள், பொதுவான நடைமுறைகளைத்தான் எதிர்பார்க்கின்றோம். பிரச்சாரத்தையல்ல மலர்-9 இல் வெளியான திரு-வளவன் அவர்களின் "ஜீரணமாகத நாட்கள் இங்கே" என்ற கவிதையினை உதாரணத்துக்கு சொல்லலாம். திரு-சிவா அவர்களின் "ஒரு கடிதமும்" இதைதான் எடுத்துக்காட்டுகிறது. இப்படித்தான் சஞ்சீவி வளர வேண்டும் என்றுதான் நாமும் எண்ணு . கின்றோம். பிரச்சாரங்களை அல்ல என்பது தான் என்னுடைய வாதமாகும்.

அன்புடன்
Rogu
Holstebro.

---

அன்புடன் சஞ்சீவி.

9 ஆவது மலரின் ஆக்கங்கள் எல்லாமே படு ஜோர். "ஆளுமையை வளர்த்துக் கொள்வது எப்படி" என்ற திரு- சி. செல்வச் சந்திரனினதும், திரு- மீரா அவர்களின் "பொதி

www.tamilarangam.net



சுமக்கும் இளங் கன்றுகள்" என்ற சிறுகதையும், திரு-முரளி அவர்களின் "சிரிக்க சிந்திக்க" என்ற ஆக்கமும் நன்று. மீராவும், முரளியும் இங்கு நடக்கும் எவ்வளவோ தவறான நடவடிக்கைகளில் இரண்டைத் தத்துவமாக விளக்கியுள்ளனர். ஒருசில வரையாவது சிந்திக்க வைக்கும் என எண்ணுகிறேன்.

அடுத்த விடயம் வீரகேசரியில் இருந்து விசயங்களை எடுத்து சஞ்சீவினை நிரப்புவது தவிர்த்தால் இன்னும் நன்கு அமையும். ஆகவே இப்படியானவற்றில் கவனம் எடுப்பது நன்று.

வணக்கத்துடன்
மாயா
8660 Skanderborg.

## குறுக்கெழுத்துப் போட்டி இல; 11ன் விடைகள்:

**மேல். கீழ்**

7. 1: பாகப்பிரிவினை
7. 9: பாடல்
14. 16: அரண
20. 25: கசடதபற
30. 33: சாண் கல்
35. 39: பகைவாதம்
40. 45: திருக்கோணமலை
51. 45: மேச்சல்க்களை
20. 18: டச்

**இடம். வலம்:**

5. 48: சிறைக்கப்பல்
6. 32: கடச்சல்
7. 45: பாடசாலை
14. 1: அன்னை
15. 26: ஐ, ந
23. 49: கோமேதகம்
24. 8: பணவரி
27. 52: பதிதல்
38. 51: (—)
47. 45: கம
50. 37: சக்கை



**பரிசுக்குரியோர்:**
K. Padmanathan
Centrum garden-39
8870 Langå.

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். பரிசிற்சாதக்கட்டளைகள் உரியகாலத்தில் இவர்களுக்கு சஞ்சீவியால் அனுப்பிவைக்கப்படும். ஏனையோருக்கும் எமது நன்றிகள்.
கு.போட். சார்பாக: எம்.கி. லோகா.

www.tamilarangam.net



# திருமதி பிறேமிளா - கருணாகரன் அவர்களுடன் ஓர் சந்திப்பு

பேட்டி - முரளி

இன்றைய இலங்கையின் நிலைமினை ஓரளவாவது அறிந்து கொள்வதற்கு உதவும் என்பதாலும் வானொலி, தொலைக்காட்சி தொலைபேசி போன்றவற்றின் செய்திகளிலும் பார்க்க நேரடியாக கேட்டறிந்து கொள்வதில் உண்மை நிலைமினைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் 19/8/90 ஞாயிற்றுக் கிழமை டென்மார்க் வந்திறங்கிய திருமதி. பிரமளா - கருணாகரன் அவர்களை இந்த பேட்டி காண்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஏற்கனவே எடுத்துக் கொண்ட நேர ஒதுக்கீட்டின் பிரகாரம் மதிய வேளை சுமார் 12.00 மணிபோல் அவர்கள் வீடு சென்றேன். கிடைத்திருக்கும் அந்தச் சொற்ப வேளையில், பேட்டியை எடுத்து முடித்து விட வேண்டுமென்ற ஆவலோடும் நம்பிக்கையோடும் பேட்டியை ஆரம்பித்தேன்.

கேள்வி:- இன்று இலங்கையில் எவ்வளவோ பயங்கரமான பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது எப்படியான துணிவோடு நாட்டை விட்டு வெளியேறினீர்கள்?

பதில்:- நாட்டிலிருக்க நாளுக்கு நாள் பிரச்சினைகள் கூடிக் கொண்டு போகுதே தவிர குறைகின்ற மாதிரித் தெரியவில்லை. எனக்கு ஏறக்குறைய ஒரு மாதத்துக்கு முன்னர் டென்மார்க் "விசா" கிடைத்திருந்தது. எப்படியாவது என் கணவரிடம் போய்ச் சேர வேண்டும் என நினைத்து

www.tamilarangam.net



உயிரையே பணயம் வைத்துத்தான் வெளியேறினேன். ஆனால் நான் மட்டுமல்ல, என்னைப் போல் எத்தனை-யோ பெண்கள் குழந்தை குட்டிகளுடன் வெவ்வேறு நாடு-களுக்குப் போவதற்காக அன்று எம் பஸ்சில் வந்தார்-கள்.

கேள்வி:- உங்களது பயணம் எப்படி அமைந்தது?

பதில் :- ஒன்றும் பேசாது கொஞ்ச நேரம் மௌனமானார். ஓர் நீண்ட அமைதிக்குப் பின் அது ஓர் நீண்ட நெடுந்தூரப் பயணம். இப்ப நினைத்துப் பார்க்கவே என்னால் நம்பமுடியாமல் இருக்கின்றது; பயமாகவும் இருக்கின்றது.

14ந் திகதி நெல்லியடியிலிருந்து பஸ் புறப்பட்டது. பின்-னர் சுமார் இரவு 8.00 மணிபோல் பொடியனின் (இயக்கம்) சோதனைக்காக நிற்பாட்டப்பட்டோம். அந்த வேளையில் திடீரெ-ன பொம்பர் வந்து குண்டுகளைப் போட்டார்கள். அங்கு நி-ன்ற எல்லோரும் திக்குத்திசை தெரியாது ஆங்காங்கே சித-றி ஓடினோம். ஒளித்துக் கொண்டோம். சுமார் 1/2 மணித்தியால-ங்களின் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. மீண்டும் சோதனைக்காக எல்லோரும் வந்து ஒன்று கூடினோம். கிற-க்குறைய 2 மணித்தியாலச் சோதனையின் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சுண்டிக்குளம் காட்டுப் பகுதியாகப் பிரயாணம் செய்தோம். அந்தப் பகுதியின் ஓர் இடத்தில் பஸ் புதையுண்டு விட்டது. அங்கிருந்த ஆண், பெண் எல்லோரும் சேர்ந்து பஸ்-ஸைத் தூக்க முயற்சித்து முடியாமல் போய்விட்டது. நன்கு இருட்டி விட்டதாலும், அதிகம் பாதுகாப்பில்லை எனக் கருதிய-தாலும் பிரயாணிகள் எல்லோரும் மூன்று பகுதிகளாக நடக்கத் தொடங்கினோம். அப்படி வந்த பாதை நோக்கி நடந்து கொண்டிருந்த போது வவுனியாவிலிருந்து வந்த சில சயிக்கிள் வியாபாரிகளைச் சந்திக்க நேர்ந்தது. அவர்-களின் உதவியினால் சரியான பாதை நோக்கி நடக்க முடிந்தது. அப்படி நடந்து கொண்டிருந்த போதே விடிந்து விட்டது. அதிகாலையில் எல்லோரும் நன்கு களைப்ப-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-டைந்து விட்டதால் அங்குள்ள பாடசாலை ஒன்றில் போய்
-த்தங்கினோம். சுமார் 10. மணிபோல் எமது பஸ் அங்கு
வந்து சேர்ந்தது. எல்லோருக்கும் அளவில்லாத சந்தோசம்.
கொஞ்ச நேரத்தின் பின்னர் அங்கிருந்து பிரயாணமா-
-னோம். சுமார் 2 மணியளவில் பஸ் வண்டி காற்றுப் போ-
-ய் விட்டது. முதலில் புகையுண்டது, இப்போது காற்றே
போய் விட்டது. இது ஏதோ அபசகுனம் தான் என எல்-
லோரும் கதைத்துக் கொண்டது எனக்கு மிகவும் கவ-
-லையை அளித்தது. கணவனைப் பார்ப்பேனோ என்ற
சந்தேகம் கூட எழுந்தது. மீண்டும் ஓமந்தை என்னும்
இடத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றிற் போய்த் தங்
கினோம்.

பின்னர் சுமார் பின்னேரம் 3 மணிபோல் பஸ் மீண்
-டும் வந்தது. சுமார் 4 1/2, 5 மணிபோல் வவுனியாவி-
-லுள்ள ஓர் ஆமிச் சென்றிக்கு ஏறக்குறைய ஒரு மைல்
-க்கு முன்னர் எங்கள் எல்லோரையும் இறக்கி விட்டு யாழ்
-ப்பாணம் நோக்கிப் போய் விட்டார்கள்.

எல்லோரும் நடந்து சென்று அங்குள்ள ஆமிக்கா-
-ம்பை அடைந்தோம். அங்கு எல்லோரும் சோதிக்கப்பட்ட
பின்னர் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டு அங்
-கே அமைந்துள்ள தேவாலயம் ஒன்றில் போய்த் தங்
கச் சொன்னார்கள். எல்லோரும் தேவாலயம் சென்றோ-
-ம். பெரும்பாலோர் அங்கே இரவு தங்கினார்கள், நா-
னுட்பட வேறு சிலர் தெரிந்த சில வீடுகளில் தங்-
கினோம்

அங்குள்ள போதகரின் ஏற்பாட்டின் படி மீண்டும் அதி
காலை எல்லோரும் தேவாலயத்தில் ஒன்று கூடினோம்.
அங்கு கொஞ்ச நேரத்தின் பின் ஆமிக்காரர்கள் வந்து எங்
-களது அடையாள அட்டைகளைத் தந்தார்கள். எங்களு-
-க்கு முன்னர் வந்த பல பேரும் அங்கிருந்தது குறி-
ப்பிடத் தக்கது. சிறிது நேரத்தின் பின் அங்கிருந்து
மூன்று பஸ்சும், ஒரு லொறியும் வெளிக்கிட்டது. எங்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பஸ்ஸில் இடம் கிடைக்காததால் லொறியிலே ஏறிப்பய-
-ணமானேன். அந்த வாகனங்களை ஆமிக்காரர்கள்
பாதுகாத்துக் கொண்டு மதவாச்சி மட்டும் வந்தார்கள்
ரெயின் வரும் வரை பாதுகாத்துக் கொண்டு பின்பு
எங்களை கொழும்புக்கு அனுப்பி வைத்தார்கள். ரெயின்
புறப்படத் தொடங்கிய பின்னர் தான் கொழும்பு போய்-
ச் சேருவோம் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் வ-
-ந்தது.

17ந்திகதி சுமார் 5 மணிபோல் கொழும்பில் வந்திற-
ங்கினோம். "இது தான் என்னுடைய பிரயாணம். அது
சரி இவ்வளவு விஷயத்தையும் எப்படி உங்கள் புத்தக-
-த்தில் எழுதப் போகின்றீர்கள்......?" எனச் சிரித்துக் கொ-
-ண்டார்.

இல்லை இந்த நிலையை எல்லோரும் அறிய வேண்டுமென்-
-றால் எழுதித் தானே ஆகவேண்டும் எனப் பதிலுக்குச் சிரி-
-த்துக் கொண்டேன்.

கேள்வி:- கொழும்பில் பாதுகாப்பாக, சந்தோசமாக இருக்க முடிந்ததா?

பதில்:- கொழும்பிலும் ஒரே பதட்ட நிலை தான். பொதுவாக தமி-
-ழர்கள் வெளியில் திரிவதேயில்லை. நான் யாழ்ப்பாணம்
நின்ற போது 20ந்திகதிக்குள் எல்லா வியாபாரிகளும்
தமிழர்கள் எல்லோரும் வெளியேற வேண்டும் என்று பத்-
திரிகையில் வந்தது என்று எல்லோரும் கதைத்துக்
கொண்டார்கள். இதனால் நானும் பயத்தோடும் பதட்-
-டத்தோடும் இருந்தேன். அடுத்த நாள் எல்லா ஏற்பாடு-
-களையும் செய்து கொண்டு 18ந்திகதி இலங்கையை
விட்டு வெளியேறினேன்.

கேள்வி:- சென்னை வந்தவுடன் உங்கள் மனநிலை எப்படியிருந்தது.

பதில்:- நான் உண்மையிலே எனது கணவரைக் காணுவே-

www.tamilarangam.net



சிறார்களின் சிந்தனைக்கான சரியான விடைகள்.

1. குக்லியெல்மோ மார்க்கோனி (1874- 1937)
2. வில்லியம் டி. ஜி. மோர்ட்டோன் (1819- 1868)
3. அலெக்சாண்டர் ஃபிளெமிங். (1881- 1955)
4. ஓர்வில் ரைட் (1871-1948) வில்பர் ரைட் (1867- 1912)
(இவர்கள் இருவரும் ரைட் சகோதரர்கள் என அழைக்கப்படுவர்)
5. தோமஸ் எடிசன் (1847-1931)

-னோ என்ற சந்தேகம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருந்தது. ஆனால் இங்கு வந்தவுடன் தான் அது முற்றாக அற்றுப் போனது. ஏதோ பெரிய ஒரு சிக்கலில் இருந்து விடுபட்ட உணர்வு. உண்மையில் நான் அதிஷ்டசாலி என்று தான் நினைக்கின்றேன். ஏன் என்றால் எவ்வளவோ சனங்கள் வெளிநாடு செல்வதற்காகப் பல மாதங்களாகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கேள்வி:- இப்போது இங்கிருந்து கொண்டு இலங்கையைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்...?

பதில்:- இங்கே பொதுவாக எல்லோரும் சந்தோசமாகவும், அமைதியாகவும் வாழ்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். இப்படியான ஒரு வாழ்க்கை முறையையும் நிலைமையும் அங்கு நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அங்கே எந்த ஒரு ஸ்தாபனங்களும் ஒழுங்காக இயங்குதேயில்லை, பாடசாலைகள் உட்பட. தற்போது செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியினால் அங்கு உணவுப் பொருட்கள் கிடைக்கின்றது. ஒரு குடும்பத்திற்கு ஒரு கிழமைக்கு ஒரு இறாத்தல் பாண் கொடுக்கப்படுகின்றது என்றால் பாருங்களேன் எம் நாட்டு நிலைமையை, எல்லாப் பிரச்சினைகளும் முடிவடைந்து டென்மார்க் போல ஒரு நல்ல அமைதியான நாடாக எம் நாடு எப்போ வரப் போகுதோ....?

கேள்வி:- இன்றைய நிலையில் பொதுமக்கள் எதை எதிர்பார்க்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றார்கள்.

பதில்:- அரசியல் ரீதியான தீர்வுகளையோ, முடிவுகளோ எனக்குத் தெரியாது. ஓர் நல்ல அமைதியை எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள் என்பது மட்டும் தெரியும்.

கேள்வி:- நடைபெறும் போராட்டங்கள் பற்றி..?

பதில்:- இதற்கு நான் என்ன சொல்வது. இந்தப் பிரச்சினை இன்று உலகம் அறிந்தது தானே. ஆனால் எனக்குப் புரியவில்லை.. ஏன் என்றால்.. முச்சந்தியில் நிற்கும் சனத்தைக் கண்டவுடன் பொம்பர் வந்து குண்டுகள் போடுது, ஆனால் வவுனியாவுக்கப்பால ஆமிக்காரர்களே பாதுகாப்பாய்க் கொண்டு போய் வடியனுப்பி வைக்கின்றார்கள். இது ஏன்...? குழப்பமாயிருக்கு.

கேள்வி:-பொம்பர் வந்து குண்டு போடும் போது உங்கள் மனநிலை எப்படியிருக்கும்...?

பதில்:-அது சொல்ல முடியாத பயம். பொம்பர் வருகின்றது என அறிந்தால் உடனே போய் பங்கருக்குள் மறைந்து கொள்வோம். [பங்கர் - பதுங்கு குழி] சில வேளைகளில் தொடர்ச்சியாக நாலு ஐந்து மணித்தியாலங்கள் வரை தொடர்ந்தும் இருக்க வேண்டி வரும். இந்நேரம் குட்டிகள், வயது போனவர்கள் நிலை தான் மிகவும் கவலைக்கிடமானது. எங்கள் இடங்களை விட யாழ் நகரப்புறங்களில் தொடர்ச்சியாக பொம்பர் தாக்கியவண்ணம் இருக்கும்.

கேள்வி:- பொம்பர் வந்து தாக்கிய பின்னர் தாக்கம் ஏற்பட்ட இடங்களையும் உயிர்ச் சேதங்களையும் போய்ப் பார்த்திருக்கின்றீர்களா...?

பதில்:- ஓம்... நாங்கள் போய்ப் பார்ப்பதுண்டு. குறிப்பிடும்

www.tamilarangam.net



அழகு உலகில் வன்மையானது தான். அதனிலும் சர்வதேச அளவில் வன்மையானது பணம் தான்.

இங்கிலாந்துப் பழமொழி.

-மையாக உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை என்று சொ-ல்லலாம். எங்கள் இடத்தில் ஒரு குடும்பம் முற்றாக அழிந்தது, பொம்பர் தாக்குதலால். அந்தக் குடும்பம் மன்னாரைச் சேர்ந்தவர்கள், மன்னாரில் பிரச்சினை என்று எமது இடத்தில் பாதுகாப்புக் கருதி வந்தவர்கள் அங்கே வந்து மடிந்து போனார்கள்.

சில வேளைகளில் வீதியில் போகும் போது திடீரென பொம்பர் தாக்குதலை ஏற்படுத்தினால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மரங்களுக்குள் பதுங்கிக் கொள்வது தான். தற்போது பொம்பரை விட "சகடை" யோ.. அல்ல என்னவோ..? எனக்குப் பெயர் சரியாகத் தெரியவில்லை. இது பொம்பரை விட மிகவும் பயங்கரமானது. பொம்பர் போடுவது விழுந்த இடத்தில் வெடிக்கும், சகடை போட்டால் விழுந்த இடத்தை விட மேலும் மூன்று இடங்களில் வெடிக்கும்.

கேள்வி:- செஞ்சிலுவைச் சங்கத்தினர் எப்படியான பாதுகாப்பில் வாழுகின்றார்கள்?


பதில்:- அவர்கள் இருக்கும் இடத்துக்கும் ஒரு முறை குண்டு விழுந்தது. வீடு தான் சேதமானது. உயிர்ச் சேதங்கள் ஒன்றும் இல்லை. அவர்கள் கூட கஷ்டப்பட்டு வாழ்கின்றார்கள்.

சிரமம் பாராது இவ்வளவு விடயங்களையும் எடுத்து விளம்பியதற்கு சஞ்சீவி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேட்டியை முடித்துக் கொண்டேன்.

— முற்றும் —

www.tamilarangam.net






புகையிரதத்தில் அன்றும் கடைசி நேரத்தில் தான் ஏறிக்கொண்டேன். வழமையான அசட்டுச் சிரிப்புடன் மயானாவைப் பார்த்து "குடே" (வணக்கம்) சொல்லி விட்டு அமர்ந்து கொண்டேன். எனக்கு எந்த விதத்திலும் பழக்கமில்லாத புதுமுகம்- அவரும் எமது நாட்டவர் தான், என்பதை மட்டும் என்னால் உணர முடிந்தது. அவரைப் பார்த்து தமிழில் வணக்கம் என்றேன். அவர் தலையை ஆட்டிய படி பதிலுக்கு "குடே" என்று மட்டும் கூறினார்.
"இவர் பெயர் விமல்"
"இவரும் இலங்கையர் தான்" "இவர் எமது மொழிபெயர்ப்பாளர் ஹெரப்ப வேக்கனிலிருந்து வருகின்றார்" என்றாள் மயானா.

நானும் பதிலுக்குத் தலையை ஆட்டி விட்டு "அது சரி மயானா, நாங்கள் இப்ப போய்க் கதைப்பதால் என்ன பிரயோசனம்" எனக் கேட்டேன். "என்ன பிரயோசனம் எனப் பார்ப்பதை விட எந்தளவு ஒரு பிரச்சினையை விளங்கிக் கொள்ளுகின்றோம் என்பது தான் முக்கியம்..... செல்வன்! நாங்கள் முன்பு கதைத்த விடயங்கள் பற்றி இப் போது பேசுவோம். அது நடக்கவிருக்கும் சந்திப்புக்கு மிக உதவியாக இருக்கும்." என்றாள் மயானா.

அவள் அப்படிக் கூறியதும் அறிமுகமில்லாத ஒருவரின் முன்பு கதைப்பதற்கு சற்றுத் தயக்கமாக இருந்தது. இருந்தும் எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு அவசியம் என்பதை நினைத்து ஆம் எனத் தலையாட்டினேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"செல்வன் நீ எதற்காக உனது தாய்நாட்டை விட்டு வெளியேறினாய்...? மயானா.

இதை எத்தனை தடவைகள் மொழிப்பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் சொல்லியிருப்பம். டென்மார்க் வந்து ஆறு வருடங்கள் ஆகியும் இந்தக் கேள்வி முற்றுப் பெறுவதாயில்லை. நான் சிரித்தபடி என்ன சொல்லுகின்றாய் என திரும்ப மயானாவைக் கேட்டேன்.

"நீ இலங்கையை விட்டு... மனைவி, பிள்ளைகள் விட்டு இந்தியாவிற்குச் சென்ற முக்கிய காரணம், இதைத் தான் கேட்கிறேன்" என்றாள். இந்தக் கேள்வி அவளுடன் வந்திருந்தவரின் முகத்தில் சிறு மாறுதலை ஏற்படுத்தியது. கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்பு அவர் தமிழனா, சிங்களவனா என்ற ஐயம்..... யாராக இருந்தால் என்ன, எனது பிரச்சினையைச் சொல்ல எனக்கு உரிமையுண்டு என்று மட்டும் எனக்குப் பட்டது.

"உனக்கு முன்பு சொன்னது ஞாபகம் இருக்கும் என நினைக்கின்றேன். இராணுவ முகாம் சித்திரவதைகளின் பின்பு இராணுவ அதிகாரி போராளிகள் பற்றிய தகவல்களை இன்னும் ஒரு வாரத்தில் எனக்கு முகாமில் வந்து சொல்ல வேண்டும் எனக் கூறி விடுதலை செய்தான். வெளியில் வரும்வரை எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆனால் வெளியில் வந்த பின்பு ஒன்று மட்டும் விளங்கியது. இனி நானாக இராணுவ முகாமுக்குச் செல்வதில்லை, என முடிவு செய்தேன். காரணம் இராணுவ முகாமிற்குச் சென்றால் இயக்கப் பொடியள் என்மேல் சந்தேகப்படுவார்கள், இயக்கத்தைப் பற்றிய தகவல்கள் சொன்னால் இயக்கம் சுடும். சொல்லாவிட்டால் ஆமி சுடும். இதுதான் எனது அன்றைய நிலை. இதனால் கடல் வழியாக இந்தியா சென்றேன்" எனக் கூறினேன்.

"அங்கு என்ன செய்தாய்"? என மயானா கேட்டாள். அங்கு கப்பல் கட்டினேன் எனச் சொல்ல வேண்டும் போலி-

www.tamilarangam.net



ருந்தது. இருந்தும் ஒரு கடையில் வேலை செய்தேன் எனக் கூறினேன். இதில் எவ்வளவு உண்மையிருக்கும் பொய்யிருக்கும் எனச் சிந்தியாமல் அப்படியா? எனத் தலையை அசைத்தான் விமல்.

"உங்களுக்கு மிக அண்மையிலுள்ள நாட்டிலே இருக்காமல் இங்கு எதற்காக வந்தீர்கள்? மயானா. விமல் எதுவும் பேசாமல் சிரித்தபடி தோள்களை மேலே உயர்த்தி விட்டு மௌனமானான். எனக்கு இக்கேள்வியும் புதிதல்ல, ஆனால் விமலின் செயல் சற்று கோபத்தினை ஏற்படுத்தியது. "மயானா அங்கு ஒரு இலங்கைத் தமிழனால் வாழமுடியாது ஏன் எனில் அங்கு தொழில் வசதியில்லை, எமது சமூக வளர்ச்சிக்கும் இந்திய மக்களின் சமூக வளர்ச்சிக்கும் பல வேறுபாடுகள் உள்ளன," என நான் கூறியதும் விமல் ஒரு சிரிப்புச் சிரித்தான். அவனது சிரிப்பினை என்னால் நன்கு விளங்கிக் கொள்ள முடிந்தது.

மயானா விமலின் சிரிப்பைக் கவனித்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் "அப்படி என்னதான் வித்தியாசம் கண்டாய்" எனக் கேட்டாள். நானும் மனைவியும் பிள்ளைகளும் தமிழ் நாட்டில் அகதி முகாமில் இருந்த போது எனது தங்கையும் இன்னும் சில பெண்களும் குடிதண்ணீர் எடுக்க அகதிமுகாமின் அருகிலுள்ள வீட்டிற்குச் சென்ற சமயம், அந்த வீட்டுக்காரி இந்த "கவுணோடு" வர வேண்டாம், அதுக்கு மேலே "தாவணி" போட்டுக் கொண்டு வரவேண்டும் எனக் கூறினாள். இதுதான் அந்த வித்தியாசம் என்றேன்" இது எந்தளவிற்கு மயானாவிற்கும் விமலுக்கும் விளங்கியது என்பது எனக்குப் புரியவில்லை.

"செல்வன் நீ சொல்வது சரி" இருந்தாலும் அவரவர் கலாச்சாரம் அவர்களுக்கு முக்கியமானது." மயானா. "அதைவிட்டாலும் கடைத் தெருவில் ஒரு முழுத்தேங்காய் வாங்கினால் கூட சனங்கள் வித்தியாசமாய்ப் பார்க்கும். மக்களின் பழக்க வழக்கங்களில் கூட நிறைய நிறைய வித்தியாசங்கள் - இது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவிர இயக்கங்களின் எல்லைச் சண்டைகள் தமிழ் நாட்டு அகதி முகாமிலும் தொடர்ந்தது

மீனைக் கண்ட கொக்கு அதனைப் பிடிப்பதற்கு தயாராக்படுத்துவது போல் "செல்வன் என்ன எல்லைச் சண்டை எனக் கேட்டான்," விமல். எனக்கு அவன் முன்பு தோள்களை உயர்த்தியது தான் ஞாபகத்திற்கு வந்தது. யார் எந்த விசயத்திலும் அக்கறை இல்லாவிட்டாலும் இயக்கங்கள் என்றவுடன் அதற்குள் ஏதாவது ஒரு விசயத்தை அசை போடுவது முடிவில் ஏதாவது ஒரு பக்கம் குறை கூறி முடிப்பதும் இன்றைய வழக்கம். அந்த வகைப் பேர் வழியாக தான் இவரும் போல் என எண்ணத் தோன்றியது." இது நடந்து ஐந்து வருடங்கள் முடிந்து விட்டன.

"நானும் இலங்கை இந்திய மக்களின் வாழ்க்கை முறைபற்றி பல புத்தகங்களில் படித்திருக்கின்றேன்..., கடந்த வருடம் வெளியேறிய இந்தியா சமாதானப் படைபற்றி" என்ன செல்வன சொல்லுகின்றாய்...? என மயானா கேட்டாள்.

மயானா அகதிகள் சங்கத்தில் தொழில் புரிபவள். இவளது பொறுப்பு கலாச்சாரப் பிரிவு. இருந்தும் இவளின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அவளின் சம்பளத்தை விட அதிகமானது. என மட்டும் என்னால் உணர முடிகிறது. வேற்று நாட்டு மக்களின் பிரச்சினைகளை மிக அவதானமாக அணுகுகின்றாள். டெனிஸ் அகதிகள் சங்கம் ஒழுங்கு செய்த ஒரு தொழிற் சங்கப் பத்திரிகையாளர் சந்திப்பில் இங்குள்ள பல இனத்தவர்கள் கலந்து கொள்ளுகின்றார்கள். இதில் கலந்து கொள்வதற்காகத் தான் நானும் மயானாவும் செல்கின்றோம். இதில் பெரிய அளவில் பிரச்சினைகளை விளங்கப்படுத்துவதற்கு எனக்கு டெனிஸ் மொழியில் ஆற்றல் போதாது. இருப்பினும் எனக்குத் தெரிந்த சில சொற்களை வைத்து முடிந்த வரையில் முயற்சிக்கலாம் என்ற நம்பிக்கையில் புறப்பட்டு விட்டேன்.


....மயானா எமது நாட்டு மீனவர்கள் கடலுக்குச் செல்லும் போதும் திரும்ப கரைக்கு வந்த பின்பும் இந்தியப் படையிடம்

தொடர்ச்சி-48

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழ்ச் சினிமா

## ஒரு பார்வை - T. சுரேந்தர்

சினிமா என்கின்ற இந்தச் சொல் இருபதாம் நூற்றாண்டின் மிகச் சக்தி வாய்ந்த மக்கள் தொடர்புச் சாதனம் என்பதில் ஐயம் இல்லை. மக்களின் சகல பகுதியினரையும் பேதமில்லாமல் கவர்ந்த சாதனமும் இதுவே.

சினிமா என்பது ஒரு கலை வடிவம் என எடுத்துக் கொண்டால் இந்தியாவிலிருந்து வெளியாகிய பல்லாயிரக் கணக்கான படங்களில் சில படங்களை நல்லவை எனத் தெரிவு செய்யப்பட்டவை. அதிலும் அதிகமானவை வங்காள மொழியிலும் மலையாள மொழியிலும் எடுக்கப்பட்டவை. தமிழ்ப்படங்களையும் வங்காள, மலையாளப் படங்கள் போல் எடுக்க முயற்சிகள் பலராலும் எடுக்கப்பட்டது. ஜெயகாந்தன், ஜெயபாரதி, ருத்ரய்யா, பாலுமகேந்திரா போன்றோரின் படங்கள் தமிழ் திரையுலகில் ஒரு சாதனையாகவே நிகழ்ந்ததெனினும் ஓர் சர்வதேசப் பரிசைப் பெற முடியாமல் போய்விட்டது.

நான்கைந்து சண்டைக் காட்சிகள், இரண்டு கபரே நடனம், நிறைய மைபூசிய பெண்கள், பூந்தோட்டத்தில் ஓடி விளையாடும் காதலர்கள். இதுவே ஓர் "தமிழ்ப்படம்" என்கின்ற நிலையை நாம் காணக் கூடியதாயுள்ளது. ஓர் ஆழமான கதையம்சமோ அல்லது மனதை நெகிழவைக்கும் பாத்திரப் படைப்புக்களையோ தமிழ்ப்படங்களில் காண்பது அரிது. இது தமிழர்களாகிய எங்களின் துரதிஷ்டமே. எமது பண்பாடு பாரம்பரியங்களையும் எமது மக்களின் வாழ்க்கை முறையையும் நாம் எந்தத் தமிழ்ப்படத்திலும் காணமுடிவதில்லை. மொத்தத்தில் தமிழ்ச்சினிமா என்பது மக்களை யதார்த்த நிலையிலிருந்து சிந்திக்க விடாமல், ஓர் அழகிய கற்பனை வாழ்க்கையைக் காட்டி அதற்குத் தயார் செய்வது போலுள்ளது.

உலகம் இன்று எத்தனையோ மாற்றங்களைக் கண்டுள்ளது

www.tamilarangam.net



போல் சினிமாவும் (பிறமொழி) எத்தனையோ புதிய வெற்றிகளைச் சாதித்துள்ளது. ஆனால் தமிழ்ப்பட உலகமோ எம்.ஜி.ஆர் சிவாஜி காலத்திலிருந்து (30 வருடமாக) காதலியைக் காதலனோ அல்லது காதலனைக் காதலியோ கலைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். மேற்கத்திய சினிமா பல துறைகளிலும் இன்று வளர்ச்சியடைந்துள்ளது. அவர்களது படைப்பாற்றல் திறமையால், சிறந்த படங்கள் மூலம் அவர்களது சமூகத்தைச் சித்தரிக்கின்றார்கள்.

முப்பது வருடங்களுக்கு முந்திய மேற்கத்தியப் படங்களைப் போலவே பல தமிழ்ப்படங்கள் இன்றும் உள்ளன. உதாரணமாகப் படத்தில் தோன்றும் ஒரு பாத்திரம் - அவரின் செய்கை, பார்வைகள், அவர் வில்லனா அல்லது கதாயகனா என்பதை ரசிகர்கள் பார்த்த உடனேயே உணர்ந்து கொள்ளக் கூடியதாய் அமைந்து விடுகின்றது. மேற்கத்திய சினிமாவைப் போல் படம் எடுப்பதற்குத் தங்களிடம் பொருளாதார வசதிகள் இல்லை போன்ற எந்தவொரு பதிலையும் கூறி இவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. அப்படி இவர்கள் சொல்வார்களேயானால் அது பொய் என்பது எல்லோருக்கும் புரியும். ஏனெனில் இந்தியாவை விட வசதிகள் குறைந்த இந்திய தமிழ் ஹிந்தி திரைப்படங்களின் தாக்கத்தால் தொடங்கிய இலங்கை [சிங்கள] திரைப்படங்கள் சர்வதேச ரீதியில் பரிசில்கள் பெற்றுள்ளது. இது இலங்கையராகிய நமக்குப் பெருமையே.

மேற்கத்திய நாடுகளில் இந்தியச் சினிமா என்றால் சத்தியஜித்ரே, மிருணாள் சென், போன்றோரே பேசப்படுகின்றனர். சிவாஜியோ பாலச்சந்திரரோ, அமிர்தாப்பச்சனோ, பாரதிராஜாவோ அல்ல. சத்தியஜித்ரே, மிருணாள்சென், இவர்களை வங்கம் தந்த இந்தியாவின் பெருமைகள் எனப் பாராட்டப்படுகின்றனர். வங்காளம் காட்டிய வழியில் மலையாளப்படங்களும், கன்னடப்படங்களும், சர்வதேச பட விழாவில் பங்குபெறத் தொடங்கி விட்டன. தற்போது மலையாளப்பட இயக்குனரான அடூர் கோபாலகிருஷ்ணன் சர்வதேச ரீதியில் அறிமுகமாகியுள்ள இந்திய டைரக்டர் ஆவார். இவரின் "எலிபதாயம்" என்னும் படம் சர்வதேசப் பரிசு பெற்றபடமாகும். இப்படம் நிலவுடமைச் சமுதாயத்தின் கடைசி ஆண் எவ்விதம் செயற்படுவான் என்பதை விளக்குகின்றது. இவரது படங்களை "தியானநிலைப்படங்கள்" (COMTEMPLATIVE MOVIE) என அழைப்பர். அதாவது சிந்தனையில் ஆழ்த்துபவை. மலையாள வங்காளப் படங்களில் அந்தந்தப் பிரதேச மக்களின் பண்பாடு, உடை, இசை போன்ற

www.tamilarangam.net



வற்றைச் சிந்திக்காமல் பிரதிபலிக்கின்றனர். அதன் மூலம் அவர்கள் தங்களது தாய்மொழியைக் கூட சர்வதேசரீதியில் பிரபல்யப்படுத்துகின்றனர். ஆனால் தமிழர்களோ "வெற்றிப்படங்கள்" என அழைக்கப்படும் படும் பிற்போக்கான வற்றையே தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். இப்பிற்போக்குத்தனமான படங்களைத் தயாரித்து விட்டு தாங்கள் ஏதோ சினிமாவில் பெரிய சாதனைகள் செய்துவிட்டது போல் தங்களைத் தாங்களே புகழ்ந்து தம்மட்டமும் அடிக்கின்றனர். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் T. ராஜேந்தர்.

சினிமா பல கலைஞர்களைக் கொண்ட கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுகின்றது. ஆனால் எல்லாவற்றையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்துபவர், சீர் செய்பவர் டைரக்டர் ஆவார். அவரே படத்தில் பங்கு கொள்ளும் கலைஞர்களையும் இயக்குபவர். ஆனால் தமிழ்ப்படங்களிலோ செல்வாக்குள்ள நடிகரின் சொல்லுக்கு இயக்குனர் நடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது, இருந்தும் வருகின்றது. மேலும் முக்கியமான விடயங்களைக் கைவிட்டு, அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்துவதும் தமிழ்ப்படங்களில் மரபாகியுள்ளது. தமிழ்ப்பட உலகில் பல செட்டிமார்கள் படம் தயாரிக்கின்றனர். இவர்கள் சமுதாயத்தில் சினிமா ஏற்படுத்தும் விளைவுகளைச் சிறிதும் சிந்திக்காமல் மக்களின் மேலோட்டமான மட்டமான உணர்வுகளைத் தூண்டும் வகையில் பணம் ஒன்றையே நோக்காகக் கொண்டு படம் எடுக்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் சினிமா என்பது மிக்க வருவாய் தரும் மிகப் பெரிய வியாபாரம். இவர்களுக்குச் சமூக அக்கறை இல்லாததன் காரணமாகவே மக்களைச் சீரழிக்கும் படங்களை எடுக்கின்றனர். தமிழ்ப்படத்தைப் பார்க்கும் சமூக அக்கறையுள்ளவர்களுக்கு இது நன்கு புரியும். இப்படிப்பட்ட படங்களைத் தயாரிப்பவர்கள் சினி-

---

"வெற்றி பெற்ற மனிதர்களிடம் பொறுமையும், சகிப்புத்தன்மை எப்போதும் அவர்களின் ஆற்றலோடு இணைந்து தான் இருக்கின்றன இரண்டையும் அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பதால் தான் அவர்களால் தொடர்ந்து வெற்றிபெற முடிகிறது."

- கார்லைல் -

www.tamilarangam.net



-மானவை ஓர் கலைவடிவமாக இதுவரை எண்ணாததே காரணமாகும். ஓர் சினிமாக் கலைஞரைப் பற்றி தமிழில் பேசப்படும் போது அவருக்கு "மார்க்கட்" இருக்கின்றதா? என்றே எல்லோரும் முதலில் கேட்கின்றனர். அவருக்குத் திறமை இருக்கா இல்லையா என்பது பற்றி அக்கறையே கிடையாது. "மார்க்கட்" இல்லாத கலைஞர் ஒருவரை திறமை மிக்க கலைஞர் என்று சொல்லும் நிலைக்கு தமிழ்ச் சினிமா நல்ல கலைஞர்களை ஒதுக்கிவிடுகின்றது. ஓர் சில கலைஞர்கள் இதற்கு விதிவிலக்கு.

மற்றைய மொழிப்படங்களைப் போல் நாவல்களைப் படமாக்கும் வழமை தமிழில் இல்லை. தமிழில் எத்தனையோ சிறந்த நாவல்கள் உள்ளன. நாவல்களைப் படமாக்கிப் பல வெளிநாட்டு இயக்குனர்கள் சர்வதேசப் பரிசில்களைப் பெற்றெடுக்கின்றனர். இந்திய டைரக்டரான சத்தியஜித்ரே இயக்கிய "பாதர் பாஞ்சலி" என்ற படம் "BIBHUTI BANNERJI" என்பரின் நாவலின் தழுவலே. இப்படம் 1956 இல் வெளிவந்தது. 1956 இல் நடந்த சர்வதேசப்பட விழாவில் ஆசியாக் கண்டத்தின் முதன் முதலாகப் பரிசு பெற்றது. இவருக்கு "OXWARD UNIVERSITY" "DOCTORATE" பட்டமளித்துக் கௌரவித்து இந்திய சினிமாவுக்கு பெருமை தேடிக் கொடுத்தவர் எனப் பாராட்டியது. இப்படம் டென்மார்க் T.V யிலும் 13.06.1987 இல் ஒலிபரப்பப்பட்டது. "பாதர் பாஞ்சாலியில் ஓர் வறிய பிராமணக்குடும்பத்தைப் பற்றியே காட்டப்படுகின்றது. அவர்களது வாழ்க்கை வறிய சூழல் போன்றவற்றை மிகவும் அற்புதமாகக் காட்டியுள்ளார் சத்தியஜித்ரே. படத்தின் நாயகனான "அப்பு" அவனின் சகோதரி, பாட்டி போன்ற பாத்திரங்கள் தங்கள் கண்களாலேயே நடித்து விடுகின்றனர். இப்படம் மூன்று பகுதிகளாக எடுக்கப்பட்டது. அப்பு சிறுவனாக இருப்பதை முதல் பாகத்திலும் இளைஞனாக வருவதை மற்றைய இரண்டு பாகங்களிலும் காட்டியுள்ளார். அவனுடைய தந்தையும் சகோதரியும் இறந்த பின் தாயுடனேயே வசித்து வருகின்றான். தாய் மகன் பாசத்தையும் மிக நுணுக்கமான கலை நயத்துடன் படமாக்கியுள்ளார்.

புரட்சிகர இயக்குனரான யில்மாஸ் குண்னே (YLMAZ GUNNEY) யின் "வழி" (YOL) என்ற துருக்கிப்படம் 1983 இல் சிறந்த படத்திற்-

www.tamilarangam.net



-கான "தங்க இலை"யைப் பரிசாகப் பெற்றது. இப்படம் நாலு கைதிக-ளைப் பற்றியதாகும். நீண்ட காலத்தின் பின் சிறையிலிருந்து திரும்பும் கைதிகள் தங்கள் குடும்பங்களிலும், அவர்கள் வாழும் சமூகத்தில் நடக்கும் கொடுமைகளைக் கண்டு மனம் கலங்கி அதற்குப் பரிகாரம் தேடுவதாயும் படம் அமைந்துள்ளது. இவர் ஒர் புரட்சிகரக் கலைஞன் என்ற ரீதியில் தீர்வும் வழங்கியுள்ளார். அந்த அற்புதமான புரட்சிக் கலைஞன் தற்போது உயிருடன் இல்லை. இவர் தனது 45வது வயதில் பிரான்சில் காலமானார். இவரது படைப்புக்கள் குர்டிஸ் தானிய மக்களுக்கு எதிராக நடைபெறும் கொடூரங்களையும், அவர்கள் மேல் திணிக்கப்பட்ட வன்முறைகளையெல்லாம் முறியடித்து குர்டிஸ் தானிய மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்கின்ற மனித நேசம் படைத்-தவை.

மேற்குறிப்பிட்ட இயக்குனர்கள் தங்கள் தங்கள் சமுதாயப்பி-ரச்சினைகளை படம் மூலமாக கூறியுள்ளனர். நம்மைப் பற்றியும் நமது பிரச்சினைகள் பற்றியும் யார் கூறப் போகின்றார்கள்.......?

- முற்றும் -

# ஏன்?

காலை தோன்றி
மாலை மறைதல் போல்
கவிஞர்கள்.... கலைஞர்கள்

எப்படி வந்து
எப்படி போகின்றார்கள்

பேசியும்....மகிழ்ந்தும்
கூடித்தழைத்தும்
கனவுகள் கலைந்தும்
கலையும் கலைஞர்கள்

காலையும் மாலையும்
விதிக்குட்பட்ட தெனின்
இதுவும் விதியே எனக்கு.

- க. ஆதவன் -

www.tamilarangam.net



# மேனையூன்யமா?

நாடு விட்டு நாடுவந்து நாம் படும் அவலங்கள்
சூடு தப்பிப் பிறந்துவிட்ட குயிலினமோ எம்மினந்தான்?

காலம் சரியில்லையப்புனக்கு கஷ்டம் வரும் - ஊரிலிருந்து
கவியுனக்கு எட்டில் ஏழரையில்
பத்தில் வியாழன் வந்து பையமா அமர்ந்ததனால்
பதிவிட்டு போனாய் பதறாதே யென்மகனே - கலங்கிப்
பதிலெழுதும் அன்னையவர்கள்.

டென்மார்க்கில், ஜெர்மனியில், நோர்வேயில், கனடாவில்
தன்மார்க்கமறியாது தவிப்பவர் இன்னுமெங்கெங்கோ - இவர்
எல்லோர்க்கும் ஏழரையா, அட்டமமா எப்போது!
சொல்வீரோ யாரும் பொருள் விளக்கம் - நானறிய.

காலுக்கு இரண்டுறை கழுத்துக்குப் பெரும்சால்வை
மேலுக்கு மயிராடை அதன் மேலும் கழுத்தங்கி
தடித்த கையுறைகள் தலைக்குத் தொப்பி - போதாமல்
வெடித்த வென்னுதட்டுக்கு வேறு சில களிப்பூச்சு

கடுங்குளிரில் நான் கதவுவிட்டிறங்கி - மிக
நடுங்கி நலமிழந்து ஒடுங்குகையில்
நாலு முழ வேட்டியுடன் நான் நடந்த நினைவு வரும்
ஆலமர நிழலில் நான் அமர்ந்த நினைவு வரும் - இக்
கால கட்டமதில் கடலருகே நள்ளிரவுவரை
காலாட்டிப் படுத்திருந்த நினைவு குளிருக்குமேலென்னை வருத்தும்.

பெரும் வெளியுடனே குளமொன்று கண்டு கொண்டால்
வல்லை வெளி நினைவில் வரும் முன்னுடனே பற்றைவினை - இங்கு கண்டால்
முள்ளி வெளியென் மனதில் நிழலாடும் - மெல்லக்

www.tamilarangam.net



குளிரடங்க சில மரங்கள் துப்பெனவே மொட்டவிழ்க்க
கொன்றை மரம் நிழலாடும் இன்னும் சில குருத் தெறியும்
அரசு நினைவில் வர அம்மாளின் ஆனிப் பொங்கலுடன்
கரகாட்டக் கலகலப்பு காதில் ஒலியெழுப்பும்.

வசந்தம் முழந்து மெல்ல வரும் கோடை தொடங்க
கசந்ததெல்லாம் மறந்து விடும் களிமிக வெறிவிடும்
எங்கும் மலர் வளந்தான் எல்லாமருங்காட்சி

இங்கேயே தங்கிவிட இடைஞ்சலெனக்கேதுண்டோ
சும்மாவிருக்கின்ற சுவர்க்கம் இது வன்றோ
அம்மாவைக் கூப்பிடலாம், அக்காவைக் கூப்பிடலாம்
அத்தானைக் கூப்பிடலாம் நாம் அவலொன்றேயாக்கிடலாம்
முத்தான கற்பனைதான் மப்புவெள்ளம் நினைப்பதுண்டோ

எல்லாம் சரியப்பு நான் பனங்கொட்டை நட்டால்- இங்கு
நல்ல பாளை வர வேண்டாம் மெல்லமுளைஞற்றுமோ ஐயா!?

சேயோகன்
8310 Tranbjerg

லையாக இருக்கு. நாங்கள் என்ன செய்யிறது. சரி நாங்கள் வாறா
ன் போயிட்டு.

பெரியவர் :- எங்கை தம்பி அவசரப்படுறாய், நாட்டு விசையத்தை
அறியவேண்டாய் .... தம்பி ஓட நிக்கிறாய்.

இளைஞன்:- அதில்லையுங்கோ! இண்டைக்கு Ribe Discotek திறக்
கிறாங்கள், அதுதான் இவன் போகவேணும் எண்டு நாண்டு
கொண்டு நிக்கிறான், அதுதான் நேரம் போகுது.

பெரி :- அ... அ! அப்பிடியே! எனக்குத் தெரியாமல் போச்சு.

இளை :- அப்ப...... நான்... வாறனுங்கோ.

பெரியவ :- சரி!.....சரி! போயிட்டுவா தம்பி.

நீ. றொபின்
Langå

www.tamilarangam.net



சென்று தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இது எந்த வகையில் நியாயமான நடவடிக்கை. எமது சொந்த நாட்டில், சொந்தத் தொழில் செய்ய இன்னொரு நாட்டின் இராணுவத்திடம்....

"இப்படி நடந்ததா...? விமல் கேட்டான். "இவர்கள் என்ன தான் மொழி படித்தாலும் இவர்கள் பொருளாதார அகதிகள் தான் என நினைத்த படி, "விமல் நீங்கள் "கொழும்பில்" வந்தீர்களா" எனக் கேட்டேன்.

விமலின் முகம் திடீரென மாறியது. தன்னை சுதாரித்துக் கொண்டு, "செல்வன்! நீங்கள் கோவப்படுவதில் எந்த நியாயமும் இல்லை. இன்றுவரை இந்தியப்படை பற்றி எங்களில் பலபேருக்கு ஒரு மயக்கம் இருக்கின்றது, இது உண்மை தான் என சற்று கடுமையாகச் சொன்னான்.

"இப்போது எனக்குத் தெளிவாக விளங்குகின்றது. இது இலங்கை இந்திய அரசின் கூட்டு நடவடிக்கை. இதில் இன்னும் மயக்கம் இருப்பது, உங்களின் பிரச்சினையை சரியாக விளங்கிக் கொள்ள முடியாது.... இங்கு இருப்பதால் பல சந்தர்ப்பங்கள் உங்களுக்குக் கிடைக்கின்றது. இதனைச் சரியாகப் பயன்படுத்தினால் உங்கள் நாட்டுக்கும் உங்கள் மக்களுக்கும் பிரயோசனமாக அமையும்" மயூரா.

மயூராவின் பதிலைக் கேட்ட இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்து விட்டு மௌனமானோம். அடுத்து வருவது ஆல்போ (Alborg) என புகையிரத அறிவிப்பு ஒலித்தது. நான் இங்கு வந்தது ஒரு சந்தர்ப்ப வசம் என்றாலும் எனக்குச் சொந்த மண்ணில் பல பிரச்சினைகள் இருந்தது. இப்போது இங்கிருந்து திரும்பிப் போவது எந்த அளவிற்கு நடைமுறைச் சாத்தியம் என என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.


முற்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி : 9




உங்கள் கருத்து:


காரியாலயப் பாவனைக்கு:

உள்ளே மடிக்கவும்:

www.tamilarangam.net






www.tamilarangam.net

ஓவியங்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு.

தமிழ்-டெனிஷ் நட்புறவுச் சங்க

"CHANCHIVE"
Postbox: 1205
7500 Holstebro
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்